பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**19 05 2026** **6 45**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - நார்வே இடையே இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாட்டில் எபோலா வைரஸ் பாதிப்பு ஏதுமில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. மக்கள் நலன் பயக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

4. கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி உள்ளிட்ட 11 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்று பிளே ஆஃப் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - நார்வே இடையே இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஆஸ்லோ-வில் நடைபெற்ற இந்தியா - நார்வே வர்த்தக உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், இரு நாடுகளுக்கு இடையே வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் அமலுக்கு வந்தது முதல் இந்த வளர்ச்சி காணப்படுவதாக பாராட்டு தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் 100 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டு இலக்கை அடைவதற்கும், அதன் காரணமாக இந்தியாவில் 10 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

கப்பல் கட்டுமானம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுகாதாரத் தொழில்நுட்பம், முக்கிய கனிம வளங்கள், புத்தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றில் இந்தியாவில் நார்வேயின் முதலீடுகளை அதிகரிக்குமாறு அவர் ஊக்கப்படுத்தினார்.

இரு நாடுகளின் வர்த்தகர்களும், புதிய கூட்டாண்மைகளை ஏற்படுத்தவும், ஒத்துழைப்புக்கான பகுதிகளைக் கண்டறியவும், பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் திரு. மோடி வலியுறுத்தினார்.

இந்த உச்சிமாநாட்டில் இந்தியா - நார்வே நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளிடையே பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தானது.

50க்கும் மேற்பட்ட நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள், இந்தியா-நார்வே நாடுகளைச் சேர்ந்த 250க்கும் மேற்பட்ட வர்த்தகம் மற்றும் ஆராய்ச்சித்துறை பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்துகொண்ட எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிலையில் தமது நார்வே பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக இன்று இத்தாலி தலைநகர் ரோம் சென்றடைகிறார்.

<<<<>>>>

நாட்டில் எபோலா வைரஸ் பாதிப்பு ஏதுமில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த வைரஸ் தொடர்பான பாதிப்பு இல்லை எனினும்,

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கண்காணிப்பு மற்றும் தயார் நிலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பு எபோலா வைரஸ் தொடர்பாக பொது சுகாதார அவசர நிலையை அறிவித்ததைத் தொடர்ந்து மத்திய அரசு உன்னிப்பாக கவனித்து வருவதாக கூறப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ள காங்கோ மற்றும் உகாண்டாவில் இருந்து வரும் பயணிகள் கண்காணிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பொதுமக்களும், ஊடகங்களும் அச்சமடையவோ அல்லது தவறான தகவல்களைப் பரப்பவோ வேண்டாம் என்று சுகாதார அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

நாட்டின் பொது சுகாதார அமைப்பு எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ள தயார் நிலையில் இருப்பதாக அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது.

சுகாதார அமைச்சகம் மற்றும் உலக சுகாதார அமைப்பு வெளியிடும் அதிகாரபூர்வ அறிவிப்புகளை கடைபிடிக்குமாறும் மக்களை சுகாதார அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

மக்கள் நலன் பயக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் தமது துறை பொறியாளர்களுடன் நேற்று ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

மக்கள் நலத் திட்டங்களுக்குத் தேவையான புதிய பணிகளைக் கண்டறிந்து பரிந்துரைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நீர்வளம் தொடர்பான அனைத்துப் பணிகளையும் விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அவர் வலியுறுத்தியதாகவும், இத்துறையில் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளில் மகளிரின் பங்களிப்பை அதிகரிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டதாக அந்தச் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் மாநில அரசின் பங்களிப்புடன் கூடிய மத்திய அரசு திட்டங்கள் குறித்து அத்துறையைச் சார்ந்த உயர் அலுவலர்களுடன் அமைச்சர் திரு. ஆனந்த் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது நிதிக்குழு மானியம் மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டதாக மற்றொரு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் பணிகள் குறித்து மாநில வர்த்தகத்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னையில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் வான்வெளி மற்றும் பாதுகாப்புத்துறை, சரக்குப் போக்குவரத்து, சிறப்பு தொழிற்பூங்காக்கள், நகர எரிவாயு விநியோகத் திட்டம் உள்ளிட்டவற்றின் செயல்பாடுகள் குறித்து அவர் கேட்டறிந்தார்.

சிப்காட் நிறுவனத்திற்கு தொழிற்பூங்காக்களுக்கான நில எடுப்பு பணிகள் குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டார்.

அத்துடன் விருதுநகர் மாவட்டத்தில் உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி பயிலும் மாணவர்கள், தொழில் நிறுவனங்கள்

பயன்பெறும் வகையில், ஆராய்ச்சி மற்றும் திறன் மேம்பாட்டு மையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு அறிக்கையை தயாரிக்குமாறு செல்வி கீர்த்தனா அலுவலர்களுக்கு அறிவுறுத்தியதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி, தேனி, திண்டுக்கல், மதுரை, கரூர், ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய 11 மாவட்டங்களின் சில இடங்களில் இன்று இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், ஒருசில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

காங்கோ நாட்டில் பரவியுள்ள எபோலா வைரசால் பாதிப்புக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 118ஆக அதிகரித்தள்ளது.

--------------

கத்தார், சவுதி அரேபியா, ஐக்கிய அரசு எமிரேட்ஸ் நாடுகளின் தலைவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஈரான் மீதான ராணுவ தாக்குதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

--------------

நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட நீதிபதிகள் விசாரணைக் குழு, தமது அறிக்கையை மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லாவிடம் சமர்ப்பித்துள்ளது.

--------------

கிழக்குப் பிராந்திய வேளாண் மாநாடு புவனேஸ்வரில் இன்று நடைபெறுகிறது.

--------------

இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக திரு. சௌரப் விஜய் பொறுப்பேற்றுக்கொண்டார்.

--------------

பாபநாசம் தாமிரபரணி ஆற்றுப் பகுதியில் துணிக்கழிவுகளை வீசுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நெல்லை மாவட்ட ஆட்சியர் திரு. சுகுமார் எச்சரித்துள்ளார்.

--------------

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே குட்டையில் குளிக்கச் சென்ற பள்ளி மாணவர்கள் 2 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

--------------

கோவை மாவட்டம் இருகூர் அருகே பள்ளி மாணவனை தாக்கிக் கொன்ற வழக்கில் சக மாணவர் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

--------------

திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி மலைப் பகுதியில் 200க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு காவல்துறை சார்பில் சைபர் கிரைம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

--------------

தருமபுரி மாவட்டத்தில் கள்ளச்சாராயம், போதைப்பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை ஒழித்தல் தொடர்பாக பல்வேறு துறை அலுவலர்களுடன் ஆட்சியர் திரு. சதீஷ் ஆய்வு மேற்கொண்டார்.

--------------

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் பிறக்கும் குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ் பெற்றோரின் வாட்ஸப் எண்ணிற்கு நேரடியா அனுப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்று பிளே ஆஃப் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 180 ரன் எடுத்தது.

181 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஹைதராபாத், 19 ஓவரில் 5 விக்கெட்டுகளை இழந்து இலக்கை எட்டி வெற்றி பெற்றது.

ஜெய்ப்பூரில் இன்று நடைபெற உள்ள போட்டியில் ராஜஸ்தான் அணி லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

--------------

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான **18** வயதுக்குட்பட்டோருக்கான ஹாக்கிப் போட்டியின் **3**வது ஆட்டத்தில் இந்தியா **6-3** என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

போபாலில் நடைபெற்ற இப்போட்டியில் கேதன் குஷ்வாஹா **2** கோலும், ஆகாஷ்தீப், ஷாருக் அலி, ரோமித் பால், அன்ஷ் பஹூத்ரா ஆகியோர் தலா ஒரு கோலும் அடித்தனர்.

நான்கு போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வென்று சமநிலையில் உள்ளன.

**4**வது மற்றும் இறுதிப் போட்டி நாளை நடைபெற உள்ளது.

--------------

மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் ஹரிஹரன் அம்சகருணன் - எம்.ஆர். அர்ஜுன் இணை - ஃபிரான்ஸ் இணையை எதிர்கொள்கிறது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் **Ashwini Bhat - Shika Gautham** இணை - கனடா இணையை எதிர்கொள்கிறது.

-------------

**ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் கேரளா 2-1 என்ற கோல் கணக்கில் கோவா அணியை வென்றது.**

**<<<<The End>>>>**